கூடுதல் சார்பு நீதிமன்றம், செங்கல்பட்டு,
முன்னிலை:– திரு.N.காமராஜ், எம்.எல்.,
கூடுதல் சார்பு நீதிபதி, செங்கல்பட்டு.
2026 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் நாள் திங்கட்கிழமை
நி.கைஅ. மனு எண்.53/2019

1. திரு.துரைசாமி நாயுடு (இறப்பு)
2. திரு.சீனிவாசன் நாயுடு
3. திரு. பெருமாள் நாயுடு
4. திரு. சின்னையா நாயுடு
5. திருமதி. குமாரி
6. திரு. கன்னியப்பன்
7. திரு. சரவணன்
8. திரு. சசிகுமார்
9. திரு. சுரேஷ்குமார்
10. திரு. ரங்கபாபு
11. திரு. கன்னையன்
12. திருமதி. குமாரி
13. திரு. ஹரிகிருஷ்ணன்
14. திரு. இமைதாஸ்
15. திரு. வரதன்
16. திருமதி. ரேணுகா
17. திருமதி. லட்சுமி
18. திரு. பிரபாகரன்

Impleaded as per Order in I.A.No.1/2025, dated 09.10.2025
Amended as per Order in I.A.No.2/2025, dated 19.11.2025

....கோரிக்கையாளர்கள்

/எதிரிடை/

சிறப்பு வட்டாட்சியர் ,
நிலம் கையகப்படுத்துதல்,
ரேடியல் சாலைத் திட்டம்,
தாம்பரம். ...எதிர்மனுதாரர்

இம்மனு கடந்த 31.07.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது கோரிக்கையாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.பிரபாகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசுதரப்பு வழக்கறிஞர் திரு.M.பிரபாகரன், அவர்கள் ஆஜராகியும், பின்

இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையின்கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**ஆணையுரை**

இம்மனுவானது தீர்வு அலுவலரால் நில ஆர்ஜித சட்டம் பிரிவு 18(1) –ன் கீழ் ஆர்ஜிதம் செய்யப்பட்ட மனுச்சொத்திற்கான இழப்பீட்டு தொகையை நிர்ணயம் செய்வதற்காக இத்தீர்ப்பாயத்திற்கு அனுப்பட்டுள்ளது.

**2) கோரிக்கையாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கோரிக்கை உரையின் சுருக்கமான விபரம் பின்வருமாறு :–**

மனுதாரர், செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தாலுகா, கருங்குழிப்பள்ளம் கிராமம், எண் 111–ல் அமைந்துள்ள, சர்வே எண் 5/1B, பட்டா எண் 83, 19 ஏர்ஸ் பரப்பளவுடைய நிலத்தின் முழுமையான உரிமையாளர். மேற்கண்ட நிலம், பழைய மகாபலிபுரம் சாலை (OMR – ராஜீவ் காந்தி சாலை) ஆறு வழிச் சாலையாக விரிவுபடுத்தும் திட்டத்திற்காக, செங்கல்பட்டு கோட்ட நெடுஞ்சாலைப் பொறியாளர் அளித்த கோரிக்கையின் பேரில், தாம்பரம் சிறப்பு தாசில்தார் (நில எடுப்பு), ரேடியல் சாலைத் திட்டம் மூலம் நில எடுப்பு செய்யப்பட்டதாகும். மேற்கண்ட நிலத்திற்கு, தாம்பரம் சிறப்பு தாசில்தார் (நில எடுப்பு) நிர்ணயித்த இழப்பீட்டுத் தொகை, நில எடுப்பு நடைபெற்ற காலகட்டத்தில் நிலவிய சந்தை மதிப்பிற்கு ஏற்ப நிர்ணயிக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தயாரித்த விற்பனைப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட நிலத்தின் விற்பனை விவரங்களையும் சந்தை மதிப்பையும் கருத்தில் கொண்ட போதிலும், ரூ.56,63,776/– மட்டுமே இழப்பீட்டுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டது. அந்த இழப்பீட்டுத் தொகை, நில உரிமையாளரான துரைசாமி நாயுடு அவர்களின் பெயரில் நிர்ணயிக்கப்பட்டது. முதல் மனுதாரர், மேற்கண்ட துரைசாமி நாயுடு அவர்களின் மகன்.

1985–ஆம் ஆண்டு துரைசாமி நாயுடு அவர்கள் காலமான பின், மனுதாரர்கள் 2 முதல் 18 வரை உள்ளவர்கள் அவரது சட்டப்பூர்வ வாரிசுகளாக இருந்து, அவருடைய சொத்துகளையும் கடன்களையும் சட்டப்படி பெறும் உரிமை பெற்றவர்களாக உள்ளனர். கருங்குழிப்பள்ளம் கிராமத்தில் உள்ள மேற்கண்ட நிலம் நில எடுப்பு செய்யப்பட்டது தொடர்பாக, மனுதாரர்களுக்கு எந்தவித அறிவிப்பும் வழங்கப்படவில்லை. இதனால், துரைசாமி நாயுடு அவர்களின் பெயரில் இருந்த வருவாய் பதிவேடுகள் மற்றும் உரிமை ஆவணங்களை நில எடுப்பு அலுவலரிடம்

சமர்ப்பிக்க இயலவில்லை. மனுதாரர்கள் பட்டா எண் 83, சிட்டா மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களை தாக்கல் செய்து, துரைசாமி நாயுடு அவர்களே அந்த நிலத்தின் உண்மையான உரிமையாளர் என்பதை நிரூபித்துள்ளனர். இருப்பினும், நில எடுப்பு அலுவலரிடம் தேவையான வருவாய் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால், எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மேலும், நில எடுப்பிற்கான விருது வழங்கப்படுவதற்கு முன்பே துரைசாமி நாயுடு அவர்கள் காலமானதால், அவருடைய சட்டப்பூர்வ வாரிசுகளான மனுதாரர்கள் 2 முதல் 18 வரை தற்போது நீதிமன்றத்தில் வைப்பு செய்யப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையை பெற உரிமை கோருப்பட்டது.

மனுதாரர்கள் 2 முதல் 18 வரை உள்ளவர்கள், துரைசாமி நாயுடு அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள் என்பதையும், அவருக்கே நிலத்தின் தெளிவான உரிமை இருந்ததையும் நிரூபிக்கும் தேவையான வருவாய் ஆவணங்களை சமர்ப்பிக்கப்பட்டது. ஆகையால், நீதிமன்றத்தில் வைப்பு செய்யப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையை பெற மனுதாரர்கள் 2 முதல் 18 வரை உள்ளவர்களே சட்டப்படி உரிமை பெற்றவர்கள். நில எடுப்பு செய்யப்பட்ட நிலங்கள் வளமான நன்செய் நிலங்களாகும். அவை அருகிலுள்ள ஏரியின் மூலம் பாசன வசதி பெற்றுள்ளதால், ஆண்டிற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பயிர்கள் தொடர்ந்து சாகுபடி செய்யப்பட்டு இருந்தது. மேலும், ஆண்டு முழுவதும் விவசாயத்திற்குத் தேவையான நீர்வசதி தொடர்ந்து கிடைத்து வந்தது. வருவாய் பதிவேடுகளில் இக்கிராமம் கிராமப்புறமாக வகைப்படுத்தப்பட்டிருந்தாலும், கருங்குழிப்பள்ளம் கிராமம் விரைவான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு ஏற்ற அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளதால், நடைமுறையில் நகர்ப்புற தன்மையுடைய பகுதியாக விளங்குகிறது. எதிர்கால ஆண்டுகளில் இப்பகுதி மேலும் வேகமாக வளர்ச்சியடையும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.
இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) தீர்வு அலுவலர் தரப்பில் 18.03.2006 அன்று ஆட்சேபனை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

4)இந்த மனுவில் தீர்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், கோரிக்கையாளர் அவருடைய மனுவில் கோரியுள்ள படி ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு நிறையீட்டு தொகையை உயர்த்தி வழங்கப்படவேண்டுமா? என்பதே ஆகும்.

5) கோரிக்கையாளர் தரப்பில் கோரிக்கையாளர் கோ.சா.1 முதல் கோ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டு அவர்களது தரப்பில் கோ.சா.ஆ.1 முதல் கோ.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/ தீர்வு அலுவலர் பக்கம் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

**6) பிரச்சனைக்குரிய தீர்வு :**

மனுதாரர் தரப்பில் மனுச்சொத்து ஆதியில் துரைசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதும், அதை அவர் ஆண்டு அனுபவித்து வந்து 14.11.1985 ல் காலம் சென்று விட்டதும், அவருக்கு பாத்தியப்பட்ட மனுச்சொத்தை எதிர்மனுதாரர் ஆர்ஜிதம் செய்து உத்தரவு பிறப்பித்து அதற்கு உண்டான இழப்பீட்டு தொகை ரூ.56,63,776/– ஐ நீதிமன்றத்தில் வைப்பீடு செய்து உள்ளார். காலம் சென்ற துரைசாமி என்பவருக்கு ராஜகோபால், சரோஜா, சாரதா, சீனிவாசன், பெருமாள், சின்னப்பன் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். இதில் சீனிவாசன் ம.சா.1 ஆகவும், பெருமாள் ம.சா.5 ஆகவும், சின்னப்பன் ம.சா.6 ஆகவும், ராஜகோபால் 7.10.2007 ல் இறந்துவிட்டதால் அவருடைய வாரிசுகளில் ஒருவரான கன்னியப்பன் ம.சா.2 ஆகவும், சரோஜா காலம் சென்றுவிட்டதால் கன்னியன் ம.சா.3 ஆகவும், சாரதா காலம் சென்று விட்ட காரணத்தினால் அவருடைய வாரிசுகளில் ஒருவரான ஹரிகிருஷ்ணன் ம.சா.4 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். மேற்படி சாட்சிகள் அனைவருமே எதிர் மனுதாரால் இழப்பீட்டு தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுஉள்ளதை மறுக்கப்படவில்லை. மேற்படி சாட்சிகள் அனைவரும் தங்களுடைய குறுக்கு விசாணையின் போது, "நிலத்தை ஆர்ஜிதம் செய்தது தொடர்பாக அரசு ஏற்கனவே உரிய இழப்பீட்டை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்து உள்ளது என்றால் சரிதான். அதை அவருடைய வாரிசுகளான நாங்கள் பெற்று கொள்வதில் ஆட்சேபனை இல்லை" என சாட்சியம் அளித்து உள்ளார்.

மனு சொத்து துரைசாமி நாயுடுவின் பெயரில் தான் இருந்து வந்தது என்பதை காட்டுவதற்கு உரிய பட்டா எண்.83 ஆனது ம.சா.ஆ.1,2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. துரைசாமி 14.11.1985 ல் இறந்ததற்கான சான்று ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. துரைசாமி நாயுடுவின் வாரிசுகள் யார் என்பதை காட்டக்கூடிய சான்று ம.சா.ஆ.4 குறியீடு செய்யப்பட்டுள்ளது. ராஜகோபால் 07.10.2007 ல் இறந்ததை காட்டக்கூடிய இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.6 குறியீடு செய்யப்பட்டுள்ளது. ராஜகோபாலின் வாரிசுகள் விவரத்தை காட்டக்கூடிய சான்று ம.சா.ஆ.7 குறியீடு செய்யப்பட்டுள்ளது. சரோஜாவின் இறப்பு சான்று ம.சா.ஆ.9 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. சாரதாவின் இறப்பு சான்று ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாரதாவின் வாரிசுகள் பற்றிய விவரம் காட்டக்கூடிய சான்று ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ஆக மேற்படி வாரிசுகளான 18 கோரிக்கையாளர்கள் அனைவருக்கும் எதிர் மனுதாரர் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்து உள்ள தொகை சென்று அடைய வேண்டியதாகும். இன்னும் தெளிவாக கூற போனால் எதிர் மனுதாரர் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்து உள்ள தொகை மற்றும் அதற்குரிய வட்டியின் துரைசாமியின் 6 வாரிசுக்கும் சம பாக உரிமை உள்ளது.

**முடிவாக, மனு அனுமதிக்கப்பட்டு எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்து உள்ள ரூ.56,63,776/- மற்றும் அதற்குண்டான வட்டி ஆகியவற்றில் துரைசாமியின் வாரிசுகளான ராஜகோபாலின் வாரிசுகளுக்கு 1/6 பாகமும், சரோஜாவின் வாரிசுகளுக்கு 1/6 பாகமும், சாராதாவின் வாரிசுகளுக்கு 1/6 பாகமும், சீனிவாசன், பெருமாள், சின்னப்பன் ஆகியோருக்கு தலா 1/6 பாகமும் கிடைக்கக்கூடியது என உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பின்னர் 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

KAMARAJ NATARAJAN
Additional Sub Judge, Chengalpattu
Digitally signed by KAMARAJ NATARAJAN
Date: 2026.08.10 16:30:49 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செங்கல்பட்டு

**<u>கோரிக்கையாளர் தரப்பு சாட்சி:</u>**

கோ.சா.1- திரு.சீனிவாசன்
கோ.சா.2- திரு.கன்னியப்பன்
கோ.சா.3- திரு.கன்னையன்
கோ.சா.4- திரு.ஹரிகிருஷ்ணன்
கோ.சா.5- திரு.பெருமாள்
கோ.சா.6- திரு.சின்னப்பன்
கோ.சா.7- திரு.லட்சுமி

**<u>கோரிக்கையாளர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | |
|---|---|
| கோ.சா.ஆ.1 | பட்டா எண்.83 சான்றிட்ட நகல் |

| | |
|---|---|
| கோ.சா.ஆ.2 | சொத்திற்குரிய சிட்டா உண்மை நகல் |
| கோ.சா.ஆ.3 | துரைசாமியின் இறப்பு சான்று |
| கோ.சா.ஆ.4 | துரைசாமியின் வாரிசு சான்று |
| கோ.சா.ஆ.5 | ஆதார் அட்டை ஒளி நகல் |
| கோ.சா.ஆ.6 | தந்தையின் இறப்பு சான்றிதழ் ஒளி நகல் |
| கோ.சா.ஆ.7 | தந்தையின் வாரிசு சான்று ஒளி நகல் |
| கோ.சா.ஆ.8 | கண்ணையினின் ஆதார் அட்டை ஒளி நகல் |
| கோ.சா.ஆ.9 | கண்ணையினின் தாயின் இறப்பு சான்றிதழ் ஒளி நகல் |
| கோ.சா.ஆ.10 | ஹரிகிருஷ்ணனின் ஆதார் அட்டை ஒளி நகல் |
| கோ.சா.ஆ.11 | ஹரிகிருஷ்ணனின் தாயின் இறப்பு சான்றிதழ் ஒளி நகல் |
| கோ.சா.ஆ.12 | ஹரிகிருஷ்ணனின் தந்தையின் வாரிசு சான்றிதழ் |
| கோ.சா.ஆ.13 | பெருமாளின் ஆதார் அட்டை ஒளி நகல் |
| கோ.சா.ஆ.14 | சின்னப்பனின் ஆதார் அட்டை ஒளி நகல் |
| கோ.சா.ஆ.15 | லட்சுமியின் ஆதார் அட்டை ஒளி நகல் |

தீர்வு அலுவலர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

KAMARAJ NATARAJAN
Additional Sub Judge, Chengalpattu
Digitally signed by KAMARAJ NATARAJAN
Date: 2026.08.10 16:30:59 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செங்கல்பட்டு.

கூடுதல் சார்பு நீதிபதி
செங்கல்பட்டு.
நி.கை.அ.மனு.எண்.53/2019
**சீரான/வரைவு உத்தரவு**
**நாள் –10**–08–2026

**ORDER**

**LAOP.No.53/2019**

**Dated: 10-08-2026 :-**

முடிவாக, முடிவாக, மனு அனுமதிக்கப்பட்டு எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்து உள்ள ரூ.56,63,776/- மற்றும் அதற்குண்டான வட்டி ஆகியவற்றில் துரைசாமியின் வாரிசுகளான ராஜகோபாலின் வாரிசுகளுக்கு 1/6 பாகமும், சரோஜாவின் வாரிசுகளுக்கு 1/6 பாகமும், சாராதாவின் வாரிசுகளுக்கு 1/6 பாகமும், சீனிவாசன், பெருமாள், சின்னப்பன் ஆகியோருக்கு தலா 1/6 பாகமும் கிடைக்கக்கூடியது என உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

கூடுதல் சார்பு நீதிபதி,
செங்கல்பட்டு.